மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நிலைமையை விளக்கி அவர்கள் தற்காலிக அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று ஒரு விண்ணப்பம் போட்டார்களானால், அதன்மீது தற்காலிக அங்கீகாரம் தரலாம். அதற்குள்ளாக கேட்கப்படுகின்ற இந்த விவரங்களை அவர்கள் தர வேண்டும்.

Complaint against a Sub-Judge of Thanjavur.

2 *S.N.Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a letter of complaint about the behaviour of a Sub-Judge at Thanjavur was submitted to the Hon. the Chief Minister, by two Legislators during the beginning of the year ;

(*b*) if so, the nature of the complaint ; and

(c) the action taken thereon ?

தஞ்சாவூர் துணை நீதிபதி ஒருவரின் மீது புகார்.

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள துணை நீதிபதி ஒருவரின் நடத்தை குறித்து இந்த ஆண்டின் தொடக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குப் புகார்க் கடிதம் ஒன்று பணிந்தனுப்பப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அப்புகாரின் தன்மை யாது ?

(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இவரது நடத்தை குறித்துச் சில குற்றச்சாட்டுகளை அவர்கள் செய்துள்ளனர்.

(உ) இதுபற்றி அரசு விசாரணை செய்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுத்தார்கள் என்று இருக்கின்றது. அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார் ? நடத்தையில் சொல்லப்பட்ட கோளாறு எத்தகையது ?

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டாக்டர் எச். வி. ஹண்டே, திரு. கே. டி. கே. தங்கமணி ஆகிய இருவர், ஒரு துணை நீதிபதியைப் பற்றி. அதாவது சப்-ஜட்ஜ், தஞ்சை மாவட்டத்திலே பணியாற்றுபவரைப் பற்றிக் கேட்டிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அது அவருடைய தொழில் சம்பந்தப்பட்ட புகாரா ? அல்லது சொந்தத்திலே அவருடைய சொந்த நடவடிக்கைகளைப் பற்றிய புகாரா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதித் துறையினுடைய பணிகளுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி.

Inclusion of Manapparai taluk in the proposed Pudukkottai district.

3 *S.N.Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to include Manapparai Taluk in the proposed new District Pudukotțai after bifurcating Tiruchirappalli District ;

(*b*) whether there is any objection from the public of Manapparai Taluk to the proposed inclusion of their taluk in the proposed district of Pudukottai ; and

(*c*) if so, the action taken thereon ?

அமையவிருக்கும் புதுக்கோட்டை மாவடடத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்த்தல்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரித்த பிறகு, தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், மணப்பாறை வட்டத்தைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு எதும் உள்ளதா ?

(இ) தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்க்கக் கருதியிருப்பது குறித்து, மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மறுப்பு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) ஆம்.